நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.
முன்னிலை-திரு.து.ஹரிராம், பி.காம்., பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு.

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

C.C. No. 228/2021

வழக்கு சாட்சி - **அ.சா.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராஜசேகர் | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மாணிக்கம் | : | தொழில் | விவசாயி |
| கிராமம் | சுக்காம்பார் | : | சமயம் | |
| தாலுக்கா | | : | வயது | 53/2023 |

( எதிரி ஆஜர்.)

**நாள் : 13.04.2023**

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் சுக்காம்பார் ஊரில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன துரைசாமியை தெரியும். கடந்த 21.12.2018 ல் காலை 06.15 மணியளவில் நானும், அ.சா.1 ம் சுக்காம்பாரில் உள்ள எனது வயலின் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி இந்திராகாந்தி தனியார் கல்லூரி வேன் ஒன்று வந்து கொண்டிருந்தது. அப்போது இறந்துபோன துரைசாமி அருகில் வந்து ஓவர்டேக் செய்யும் போது அவர் மீது மோதி விபத்து ஏற்பட்டது. நாங்கள் அருகில் சென்று தூக்கியபோது, காதிலும், மூக்கிலும் இரத்தக்கசிவு இருந்தது. உடனே ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து Srirangam அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு, இறந்துவிட்டதாக கூறினார். பின்னிட்டு புகார் அளித்தோம். என்னை தோகூர் போலிசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** - புகாரை ராஜாங்கம் தான் எழுதி காவல்நிலையத்தில் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரில் நான் விபத்தை நேரடியாக பார்த்ததாக சாட்சியாக கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நானும், ராஜாங்கமும் ரோட்டின் வடக்குபகுதியில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து நடந்தது ரோட்டின் தெற்கு பகுதி என்றால் சரிதான். டமார் என்று சத்தம்கேட்டுதான் நாங்கள் பார்த்து, ஓடிசென்று அவரை பார்த்தோம் என்றால் சரிதான். ஓவர்டேக் செய்து வந்த வண்டி என்னவென்றால், ஆட்டோவை ஓவர்டேக் செய்து வந்தார். ஆட்டோவை ஓவர்டேக் செய்து வந்தார் என்ற விவரத்தை போலிசார்விசாரணையின்போது நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இறந்துபோனவர் எனக்கு பழக்கமானவர் என்பதால், போலிசார் கேட்டுக்கொண்டதற்க இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

ஒம்/-து.ஹரிராம்,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.